**No:** ARCDA/120/2019-A6

தொல்பொருள் துறை
சுந்தரவிலாசம் பாலஸ், போர்ட் பி.ஓ.
திருவனந்தபுரம்-23
தொலைப்பேசி எண்: 0471-2577465
மின்னஞ்சல்: dirarch@bsnl.in
இணையத்தளம்: archaeology.kerala.gov.in
தேதி: **04/09/2019**

## மறு ஏல நோட்டீஸ்

தொல்பொருள் துறையின் கீழ் இயங்கும் தக்கலை பத்மனாபபுரம் அரண்மனையில் வரும் பார்வையாளர்களின் காலணிகள், பைகள், கேமரா, வீடியோ கேமரா முதலியவைகளை பாதுகாக்கின்ற அறையின் 1-10-2019 முதல் 30-9-2020 வரையான ஒரு வருட கால உரிமம் 24-9-2019 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தக்கலை பத்மனாபபுரம் அரண்மனையில் வைத்து பொது ஏலம் நடைபெறும். ஏல கட்டணம் மற்றும் நிபந்தனைகளும் கீழ்குறிப்பிடுமாறு

1. ஏலத்தில் பங்குபெற விரும்பும் நபர்கள் ஏல நேரத்தின் ஒரு மணி நேரத்திற்கு முன்னதாகவே நிரந்தர வைப்பீட்டு தொகையான ரூபாய் 12,600/- ( பனிரெண்டாயிரத்தி அறுநூறு ரூபாய்) அரண்மனை அலுவலகத்தில் செலுத்தி ரெஜிஸ்டர் செய்துகொள்ளவேண்டும்.

2. குறைந்தபட்ச எலத்தொகை ரூபாய் 5,03,685/- ( ஐந்து லட்சத்து மூன்றாயிரத்து அறுநூற்று எண்பத்து ஐந்து ).

3. ஜி.எஸ்.டி. யும் வருமான வரியும் அடங்காத தொகையை ஏலாமாய் கேட்டகவேண்டும். அதிகப்படியான தொகைக்கு ஏலம் எடுக்கும் நபரின் பெயரில் துறை தலைவரின் கடைசி தீர்மானத்தின் அடிப்படையில் ஏலம் முடிவு செய்து கொடுக்கப்படும்.

4. ஏலம் முடிந்ததும் ஏலம் எடுக்கும் நபரை தவிர மற்ற நபர்களின் நிரந்தர வைப்பீடு தொகை உடனடியாக திருப்பி அளிக்கப்படும். ஏல ஒப்பந்தம் முடிந்தவுடன் நிரந்தர வைப்பீட்டுத்தொகையாக செலுத்திய தொகையை ஏலம் எடுத்தவருடைய விண்ணப்பத்தின்படி திருப்பிக்கொடுக்கப்படும்.

5. ஏலம் முடிந்ததும் ஏலம் எடுத்த நபர் ஏலத்தொகை அதனுடன் 18% GST -யுடன் பான்கார்டு தரும் பட்சத்தில் 2% வருமான வரியும், அல்லாத பட்சத்தில் 20% வருமானவரி ஏலத்தொகையுடன் சேர்த்து உடனடியாக ஒரே தவணையாக செலுத்த வேண்டியதுமாகும்.

6. ஒப்பந்தம் செய்து கொள்ளும்முன் குறைந்தபட்ச எலத்தொகையின் 5% தொகை துறையின் பெயரில் துறை இயக்குனர் பரிந்துரைப்பதின் மூலம் டெபாசிட் செய்ய வேண்டும். இந்த தொகை ஏல காலளவு முடிவடைந்ததும் திருப்பி அளிக்கப்படுவதுமாகும்.

7. ஏலத்தை எடுப்பவர் துறையுடன் துறை அனுமதிக்கும் கால கெடுவிற்குள் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும்.

8. அரண்மனையின் பார்வை நேரம் காலை 9 மணி முதல் 5 மணி வரை. 1-10-2019 முதல் 30-9-2020 வரையான ஒரு வருட காலமும் அனைத்து வேலை நாட்களிலும் காலை 9 மணி முதல் இயங்கி கடைசி பார்வையாளர் பார்வையிட்டு திரும்பி செல்லும் வரை பாதுகாப்பு அறை இயங்க ஏலம் எடுத்தவர் வழிவகுத்தல்வேண்டும். பார்வை நேரத்தில் மாற்றம் ஏற்படுத்த வேண்டுமானால் இயக்குநரின் அனுமதி பெற்றுருத்தல் வேண்டும்.

9. பாதுகாப்பு அறையில் பொருள்கள் வைப்பதற்கு பார்வையாளர்களிடமிருந்து பெறும் கட்டண விவரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது

i) ஒரு ஜோடி காலணிகளுக்கு – 2 ரூபாய்

ii) பை/கேமரா – 10 ரூபாய்

iii) வீடியோ கேமரா – 20 ரூபாய்

இந்த தொகை பெற்றுக்கொள்ளும்போது ரசீது/கூப்பன் கொடுக்கவேண்டும். பார்வையாளர் பொருள்கள் திரும்பப்பெறும்போது விரைவாகவும் பாதுகாப்பாகவும் பொருள்களை திரும்ப கொடுக்கவேண்டும்.

10. கட்டண விவரங்கள் மலையாளத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரண்மனை அலுவலரின் ஆலோசனையின்படி பாதுகாப்பு அறையில் பொருத்தப்பட வேண்டும்.

11. பாதுகாப்பு அறையின் இயக்கத்தை குறித்து துறையின் இயக்குனரோ அரண்மனை அலுவலகரோ காலாகாலங்களாக குறிப்பிடுகின்ற விதிமுறைகளை ஏலாதாரர் பின்பற்ற வேண்டும்.

12. ஏலம் எடுப்பவர் அல்லது அவரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட நபராலோ துறையின் பொருள்களுக்கு எந்த ஒரு சேதமும் ஏற்படுத்தாமல் இருத்தல் வேண்டும். ஒருவேளை சேதம் ஏற்படுமானால் அந்த பொருள்களுக்கு ஈடான தொகையை இயக்குனர் தீர்மானிக்கவும் அதனை டெபாசிட் தொகையிலிருந்தோ அல்லது சட்டப்படியான மாற்று வழியிலோ பெற்றுக்கொள்ள இயக்குனருக்கு உரிமையுள்ளது.

13. ஏலகாலளவின்போது எந்த நேரத்திலும் எக்காரணமுவுமின்றி ஒருமாத முன் நோட்டீஸ் கொடுத்து ஏல உரிமம் ரத்து செய்ய இயக்குனருக்கு உரிமையுள்ளது. அந்தபட்சத்தில் மீதமுள்ள ஏல காலத்தின் மீதத்தொகை ஏலகாலளவின் சதவீத அடிப்படையில் ஏலாதாரருக்கு ஏலக்காலளவு முடிவதற்குள் திருப்பி கொடுக்கப்படும்.

14. ஏல நேரத்தின் முன் எந்த நேரத்திலும் ஏல நிபந்தனைகளிலோ ஏலத்தீர்மானங்களிலோ திருத்தல் செய்யவோ ஏலம் தள்ளிவைக்கவும் இயக்குனருக்கு உரிமையுண்டு. ஏதேனும் மாற்றங்கள் ஏற்படுமானால் www.archaeology.kerala.gov.in எனும் இணையத்தளத்தில் 'tenders' எனும் லிங்கில் வெளியிடப்படும்.

15. இந்த நோட்டீஸில் குறிப்பிட்டுள்ள நேரத்தில் விடுமுறையின் மூலமாகவோ அல்லது வேறு காரணத்தாலோ ஏலம் நடைபெறாவிட்டால் அடுத்த வேலை நாளில் குறிப்பிட்ட அதே நேரத்தில் அதே இடத்தில் வைத்து ஏலம் நடைபெறும்.

கூடுதல் விவரங்களுக்கு தொல்பொருள் துறையிலோ பத்மனாபபுரம் அரண்மனை அலுவலகத்திலோ அலுவக நாட்களில் விசாரித்து தெரிந்துகொள்ளலாம். (தொலைபேசி எண் துறை இயக்குனருடைய அலுவலகம் – 0471–2577465 , பத்மனாபபுரம் அரண்மனை அலுவலகம் – 04651–250255)

இயக்குனர்

தொல்பொருள் துறை

Signature Not Verified
Digitally signed by SONA K R
Date: 2019.09.04 15:34:40 IST
Reason: Approved